| | | |
|---|---|---|
| **O.S No.** | : | 100/2011 |
| **DATE** | : | **13.11.2025** |
| **பெயர்** | : | **அன்பழகன்** |
| **தந்தை பெயர்** | : | |

வாதி தரப்பு பி.வா. சா. 2 குறுக்கு விசாரணை தொடர்ச்சி

2. கடந்த வாய்தாவில் உயில் அசல் தாக்கல் செய்வதாக தெரிவித்திருந்தேன் அந்த ஆவணம் 1ம் பிரதிவாதி மூலம் தாக்கல் செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டதாக வழக்கறிஞர் மூலம் தெரிந்து கொண்டேன். சாட்சியிடம் 1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பி.வா.சா.ஆ1 முதல் 4 காண்பிக்கப்பட்டது. மேற்படி உயில் அதில் இல்லை என்று சாட்சி ஒப்புக் கொண்டார். நான் சொத்து வாங்கும் போது உயிலை பார்த்து அதன் அடிப்படையில் தான் வாங்கினேன். அந்த உயிலை 1ம் பிரதிவாதியிடம் இருந்து வாங்கி பார்த்தேன். கிரையம் பெற்ற போது அசல் உயில் ஆவணத்தை வாங்கினேன். அந்த அசல் ஆவணத்தை எனது வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன்.

3. நான் சொல்வது போல் உயில் ஆவணத்தை பார்க்காமல் கிரையம் பெற்றுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. உயில் பத்திரம் 10.10.1982 ல் எழுதிய தேதியில் இருந்து அமலுக்கு வந்தது. உயில் எழுதியவர் 1989ல் காலமானார் என்று நினைக்கிறேன். அந்த உயிலை யார் தயார் செய்தார்கள் என்ற விவரம் ஞாபகமில்லை. முருகேசன் என்பவர் முகவர் என்ற அடிப்படையில் எனக்கு கிரையம் செய்து கொடுத்தார். 1ம் பிரதிவாதி முருகேசனுக்கு 10.10.2007 அன்று பவர் பத்திரம் எழுதி கொடுத்தார். அந்த ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன். உயிலின் அடிப்படையில் ரத்தினகுமாரின் ஆண் வாரிசுகளுக்கு சொத்து ஒதுக்கப்பட்டது.

**கற்றறிந்த வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

(S/d.Fanny Rajan)
Principal District Munsif,
Kancheepuram.